# 7. தமிழ்நாடு – மானுடப் புவியியல்

## I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா………… **(PTA - 5)**
   ***அ) காவிரி டெல்டா*** ஆ) மகாநதி டெல்டா
   இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா
2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் …….
   அ) பருப்பு வகைகள் ***ஆ) சிறுதானியங்கள்***
   இ) எண்ணெய் வித்துக்கள் ஈ) நெல்
3. தமிழ்நாட்டின் மிகப்பெரிய நீர்மின்சக்தி திட்டம்
   ***அ) மேட்டூர்*** ஆ) பாபநாசம் இ) சாத்தனூர் ஈ) துங்கபத்ரா
4. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
   ***அ) 3 மற்றும் 15*** ஆ) 4 மற்றும் 16 இ) 3 மற்றும் 16 ஈ) 4 மற்றும் 15

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

1. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு **21** சதவீதத்தை வகிக்கிறது.
2. சாத்தனூர் அணை ***தென்பெண்ணை*** ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. **(AUG - 2022)**
3. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ***சென்னை*** ஆகும்.
4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு ***வர்த்தக சமநிலை*** என அழைக்கப்படுகிறது. **(SEP - 2020)**

## III. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பாக்சைட் | - | அ) சேலம் |
| 2 ஜிப்சம் | - | ஆ) சேர்வராயன் மலை |
| 3. இரும்பு | - | இ) கோயம்புத்தூர் |
| 4. சுண்ணாம்புக்கல் | - | ஈ) திருச்சிராப்பள்ளி |

| விடைகள்: | 1 - ஆ | 2 - ஈ | 3 - அ | 4 - இ |
|---|---|---|---|---|

## IV. சரியான கூற்றினை கண்டுபிடி

1. **கூற்று:** கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது.
   **காரணம்:** இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன.
   ***அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம், கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.***
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.
   இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
2. **கூற்று:** நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம். **(PTA - 4)**
   **காரணம்:** இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது.
   அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
   ***ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல.***
   இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
   ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

**1. தமிழ்நாட்டின் வேளாண் பருவக்காலங்களை எழுதுக. (MAY-2022, PTA - 6)**

| பருவம் | விதைக்கும் காலம் | அறுவடை காலம் | முக்கிய பயிர்கள் |
|---|---|---|---|
| சொர்ணவாரி (சித்திரைப் பட்டம்) | ஏப்ரல் - மே | ஆகஸ்டு - செப்டம்பர் | பருத்தி மற்றும் தினை வகைகள் |
| சம்பா (ஆடிபட்டம்) | ஜுலை - ஆகஸ்டு | ஜனவரி - பிப்ரவரி | நெல் மற்றும் கரும்பு |
| நவரை | நவம்பர் - டிசம்பர் | பிப்ரவரி - மார்ச் | பழங்கள், காய்கறிகள், வெள்ளரி, தர்பூசணி |

**2. கோயம்புத்தூர் ஏன் "தமிழ்நாட்டின் மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது? (PTA - 3)**

- ♣ பருத்தி நெசவாலைகள் கோயம்புத்தூரில் செறிந்து காணப்படுகிறது.
- ♣ இதனால் கோயம்புத்தூர் 'தமிழ்நாட்டின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது.

**3. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.(AUG-22, SEP-21, PTA-5)**

- ♣ மேட்டூர் அணை
- ♣ அமராவதி அணை
- ♣ முல்லைப்பெரியாறு அணை
- ♣ பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம்

**4. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன? (PTA - 4)**

- ♣ நகரங்களில் வாகன நெரிசலை குறைப்பதற்காக கொண்டு வரப்பட்டதாகும்.
- ♣ சென்னையில் மெட்ரோ இரயில்வே அமைப்பும், மே 2017 முதல் பாதாள இரயில் இயக்கத்துடன் இப்போக்குவரத்து விரிவாக்கம் செய்து வருகிறது.

**5. தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.**

- ♣ **சர்வதேச விமான நிலையங்கள்** : சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி,
- ♣ **உள்நாட்டு விமான நிலையங்கள்:** தூத்துக்குடி, சேலம்.
- ♣ **துறைமுகங்கள்** : சென்னை, எண்ணூர், தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம்.

## VI. வேறுபடுத்துக.

| 1. | கடல் மீன்பிடித்தல் | உள்நாட்டு மீன் பிடித்தல் |
|---|---|---|
| அ) | பெருங்கடல் அல்லது கடற்கரையில் இருந்து சில கிலோமீட்டர் தூரம் வரை மீன்பிடித்தல் 'கடலோர மீன்பிடிப்பு' என அழைக்கப்படுகிறது. | ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்கள், காயல்கள் மற்றும் சதுப்பு நிலப்பகுதி போன்ற நீர் நிலைகளில் உள்நாட்டு மீன் பிடித்தல் நடைபெறுகிறது. |
| ஆ) | சுறா, பறவை மீன், சங்கு, மீன், கெளுத்தி, வெள்ளி வயிறு மீன் | சிப்பிகள் மற்றும் இறால்கள் மீன் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. |
| இ) | சென்னை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம். | கடலூர், சிவகங்கை மற்றும் விருதுநகர். |

| 2. | உணவுப் பயிர்கள் | வாணிபப் பயிர்கள் |
|---|---|---|
| அ) | உணவுக்காக வளர்க்கப்படுகின்றன. | வருமானத்திற்காக் வளர்க்கப்படுகின்றன. |
| ஆ) | தஞ்சாவூர், கோயம்புத்தூர், தர்மபுரி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளில் வளரும். | மதுரை, வேலூர், நீலகிரி ஆகிய பகுதிகளில் வளரும். |
| இ) | நெல், தினைவகைகள் மற்றும் பருப்பு வகைகள். | கரும்பு, பருத்தி, சூரியகாந்தி, தென்னை, முந்திரி, மிளகாய், எள், நிலக்கடலை. |

| 3. | மேற்பரப்பு நீர் | நிலத்தடி நீர் |
|---|---|---|
| அ) | ஆறுகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் ஆகியவை இதில் இடங்கும். | ஆழ்துளை கிணறு, திறந்த கிணறுகள் போன்றவை இதில் அடங்கும். **(PTA - 3)** |
| ஆ) | பாசனத்திற்காக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. | நிலத்தடி நீரின் பயன்பாடு தற்போது அதிகரித்து வருகிறது. |

## VII. கீழ்க்கண்டவற்றிற்குக் காரணம் கூறுக.

**1. விவசாயிகள் இரசாயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள்.**

- ♣ கரிம வேளாண்மையில் சத்துக்கள் மீண்டும் மண்ணில் தக்கவைக்கப்படும்.
- ♣ இதில் விளையும் உணவில் புரதங்கள் மற்றும் ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

**2. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகம். (PTA - 4)**

- ♣ கல்வி, கல்லூரிபடிப்பு, மருத்துவமனை, போக்குவரத்து, பொழுதுபோக்கு போன்ற அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே மக்கள் நெருக்கம் நகர்புறங்களில் அதிகம்.

**3. தமிழ்நாட்டின் "நெசவாலைத் தலைநகர்" என கரூர் அழைக்கப்படுகிறது.**

- ♣ கரூரில் ஏராளமான நெசவாலைகள் உள்ளன. மேசைத்துணி, திரைச்சீலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் துண்டுகள் போன்ற வீட்டு அலங்கார பொருட்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாக கரூர் உள்ளது.

## VIII. பத்தி அளவில் விடையளிக்கவும்.

**1. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக. (SEP – 2021)**

**அ) தேயிலை:** நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மலைகளில் தேயிலை தோட்டங்கள் காணப்படுகின்றன.

**ஆ) காபி:** மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளில் காபி பயிரிடப்படுகின்றது.

**இ) இரப்பர்:** இரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரியில் அதிகமாகக் காணப்படுகிறது.

**ஈ) மிளகு:** தமிழ்நாட்டிலுள்ள, மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் கிழக்கு தொடர்ச்சிமலைகளின் சரிவுகளில் மிதவெப்பம் மற்றும் ஈரமான காலநிலை உள்ள பகுதிகளில் மிளகு விளைகின்றது.

**உ) முந்திரி:** கடலூர் மாவட்டத்தில் பெரும் பகுதிகளில் முந்திரி பயிரிடப்படுகின்றது.

**2. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதவும். (PTA - 6, MDL - 19)**

- ♣ தமிழ்நாட்டின் மொத்த மேற்பரப்பு நீரின் அளவு ஏறத்தாழ 24,864 மில்லியன் கனமீட்டராகும்.
- ♣ மாநிலத்தில் 17 பெரிய ஆற்று வடிநிலப்பகுதிகள், 81 நீர்த்தேக்கங்கள், 41,262 ஏரிகள் உள்ளன.

➔ **நீர் வளம்:**

| | |
|---|---|
| ஆற்று வடிநிலம் | - 17 |
| நீர்த்தேக்கங்கள் | - 81 |
| ஏரிகள் | - 41,127 |
| ஆழ்துளை கிணறுகள் மற்றும் மற்ற கிணறுகள் | - 4,98,644 |
| திறந்தவெளி கிணறுகள் | - 15,06,919 |

➔ **அணைகள்**

- ♣ மேட்டூர் அணை
- ♣ பவானி சாகர் அணை
- ♣ அமராவதி அணை
- ♣ கிருஷ்ணகிரி அணை
- ♣ சாத்தனூர் அணை
- ♣ முல்லைப்பெரியாறு அணை
- ♣ வைகை அணை
- ♣ மணிமுத்தாறு அணை
- ♣ பாபநாசம் அணை
- ♣ பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் ஆகியவை தமிழ்நாட்டின் முக்கிய நீர் ஆதாரங்கள் ஆகும்.

3. **தமிழ்நாட்டின் கனிம பரவலை விவரி.**

**மாநிலத்தில் காணப்படும் முக்கியமான தாதுக்கள் :**

- ♣ நெய்வேலி, மிகப்பெரிய **பழுப்பு நிலக்கரி** வளங்களைக் கொண்டுள்ளது.
- ♣ காவிரி வடிநிலப் பகுதியில் எண்ணெய் மற்றும் **இயற்கைவாயு படிவுகள்** காணப்படுகிறன.
- ♣ சேலம் மாவட்டத்தில் உள்ள கஞ்சமலையிலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் **இரும்புத்தாது படிவுகள்** காணப்படுகின்றன.
- ♣ திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் **ஜிப்சம்** கிடைக்கிறது.
- ♣ கன்னியாகுமரி கடற்கரை மணல் பரப்புகளில் **இல்மனைட் மற்றும் ரூட்டைல்** காணப்படுகிறது.
- ♣ கோயம்புத்தூர், தர்மபுரி, கரூர், நாமக்கல், நீலகிரி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் **மேக்னசைட்** கிடைக்கிறது.

4. **தமிழ்நாட்டில் அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட பகுதிகள் மற்றும் அதற்கான காரணங்களை எழுதுக.**

➔ **அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள்**

- ♣ இந்தியாவின் மக்களடர்த்தியில் தமிழ்நாடு 12வது இடத்தில் உள்ளது.
- ♣ சென்னை ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 26,903 மக்களடர்த்தி கொண்ட மாவட்டமாகும்.
  - ♣ கோவை ♣ சென்னை ♣ திருவள்ளூர் ♣ காஞ்சிபுரம் ♣விழுப்புரம்
  - ♣ தர்மபுரி ♣ சேலம் ♣ மதுரை ♣ திருநெல்வேலி

➔ **காரணங்கள் :**

- ♣ தொழில்துறை மேம்பாடு ♣ திறனுக்கேற்ற வேலைவாய்ப்புகள் ♣ மேற்கல்வி
- ♣ மேம்பட்ட வாழ்க்கைத்தரம் ♣ மருத்துவ வசதி ♣ போக்குவரத்து வசதிகள்

5. **தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி.**

**அ) சாலைப்போக்குவரத்து :**

- ♣ மாநிலத்தின் மொத்த சாலைகளின் நீளம் 1,67,000 கிலோமீட்டர் ஆகும்.

**ஆ) இரயில்வே போக்குவரத்து**

- ♣ தெற்கு இரயில்வேயின் தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது.
- ♣ சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன.

**இ) வான்வழி போக்குவரத்து**

- ♣ தமிழ்நாட்டில் 4 முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.
- ♣ சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியன நாட்டில் பிற சர்வதேச விமானநிலையங்கள் ஆகும்.

**ஈ) நீர்வழி போக்குவரத்து**

- ♣ சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை தமிழ்நாட்டின் மூன்று முக்கிய துறைமுகங்களாகும்.

**6. சாலைப் பாதுகாப்பு விதிகள் பற்றி எழுதவும்.**

- சாலைகளில் நடந்து செல்லும் போது இடது புறமாக செல்ல வேண்டும்.
- சாலையைக் கடக்கும் போது வரி கோடிட்ட இடத்தில் தான் சாலையைக் கடக்க வேண்டும்.
- சாலைகளில் அதிவிரைவாக வாகனங்கள் செலுத்துவதை தவிர்த்தல்.
- இருசக்கர வாகனங்களில் செல்லும் போது ஓட்டுபவரும் பின்னால் அமர்ந்திருப்பவரும் தலைக்கவசம் அணிவது சிறந்தது.
- வாகனம் ஓட்டும் போது தொலைபேசியில் பேசுவதோ பாட்டு கேட்பதோ கூடாது.
- சாலையில் செல்லும் போது பின்னால் வரும் தீயணைப்பு வண்டி, அவசர ஊர்திகளுக்கு வழிவிட வேண்டும்.
- ஓட்டுநர் உரிமம், வண்டி உரிமம் ஆகியவை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.

## IX. நிலவரைபடப் பயிற்சி (இப்புத்தகத்தின் பக்க எண் : 151, 154, 156ஐப் பார்க்கவும்)

WAY TO SUCCESS